DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -11

| | | |
|---|---|---|
| Name | : திரு. கோவிந்தசாமி | Caste: |
| Father's Name: | திரு. சின்னபயல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A11, A13 to A18 present. A8 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 08.01.2024**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் வங்குடியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட 5 நபர்களையும் எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு பங்காளளி உறவு முறையாக வேண்டும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது உறவினர்கள் தான். இப்போதிலிருந்து சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் நான் எனது வீட்டிலிருந்தேன். அப்போது வீட்டின் முன்புறமுள்ள ரோட்டில் சத்தம் கேட்டது. அப்போது காலை சுமார் 10.00 மணி இருக்கும்.

நான் சத்தம் கேட்டு வீட்டைவிட்டு வெளியே வந்து பார்த்தேன். அப்போது 10 முதல் 15 நபர்கள் கும்பலாக கிழக்குபுறமாக ஓடினார்கள். கொலைசெய்துவிட்டார்கள், கொலை செய்துவிட்டார்கள் என்று கத்தினார்கள். நானும் பயந்துகொண்டு வீட்டின் பின்புறமாக ஓடிவிட்டேன். எதிரிகள் திருஞானமும், ரவியும் அந்த பக்கம் வந்தார்கள்.

கைகளில் அவர்கள் இருவரும் கத்திகள் வைத்திருந்தார்கள். அதை பார்த்து நான் பயந்து கொண்டு ஓடிவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது 16.05.2008 அன்று காலை 10.00 மணியளவில் நானும், மச்சகேந்திரன் மனைவி கைகேயியும் போஸ்ட் ஆபிஸில் நின்றுகொண்டிருந்தபோது வண்ணாங்குளத்திலிருந்து வீட்டிற்கு சென்ற சூரியமூர்த்தி மகன் சுரேஷ் என்பவர் வீட்டிற்கு சென்றவர், பாலுசாமி வீட்டிலிருந்து வடக்கு நோக்கி ஓடிவந்து நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு கிழக்கு புறமாக ஓடிவந்தார் என்றும், எதிரிகள் ரவிச்சந்திரனும், திருஞானமும் பட்டாகத்தியுடன் மேற்படி சுரேஷ் என்பவரை துரத்திகொண்டு ஓடிவந்ததாகவும் சொல்லியிருக்கிறேன்.

எதிரிகள் ரவிச்சந்திரனும், திருஞானமும் சுரேசை வழிமறைத்து எதிரி திருஞானம் சுரேசை வெட்டியதாகவும், அதனை சுரேஷ் இடது கையால் தடுத்ததாகவும், அதனால் சுரேசின் இடது கையில் வெட்டுகாயம் ஏற்பட்டதாகவும், பின்முதுகில் வெட்டியதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எங்கெங்கு வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

எதிரி ரவிச்சந்திரன் சுரேசை கழுத்தில் வெட்டினார் என்றால் எதிரிகள் திருஞானமும், ரவிச்சந்திரனும் தான் சுரேசை வெட்டினார்கள். அவ்வாறு வெட்டியதின் காரணமாக சுரேஷ் தடுமாறி பக்கத்திலிருந்த டிச்சில் விழுந்துவிட்டார் என்றால் அவர்கள் வெட்டியதை பார்த்து நான் பயந்து கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டேன். டிச்சியில் விழுந்த சுரேசை நாங்கள் தூக்க ஓடிமுயற்சி செய்தபோது எங்களால் தடுக்கமுடியவில்லை என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

பின்னர் எதிரிகள் இருவரும் பட்டாகத்தியுடன் காளியம்மன் கோவிலுக்கு

போய்விட்டார்கள் என்றும், நாங்கள் ஓடிசென்று தூக்கிபார்த்தபோது சுரேசின் உயிர் போய்விட்டது என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சிறிது நேரம் கழித்து நான் தெருவில் நின்று பார்த்தபோது எதிரிகள் திருஞானம், பழனிசாமி, ராஜதுரை, தினேஷ், திருவாளப்புத்தூர் ரமேஷ், பிரபாகரன் ஆகிய 6 பேரும் பட்டாகத்தி மற்றும் அரிவாளுடன் காளியம்மன் கோவில் தெருவில் , காளியம்மன் கோவில் வழியாக கிழக்கு நோக்கி வந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

போலிசார் விசாரணையில் நான் பார்த்த சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் சொன்ன நான் வீட்டில் இருந்ததாகவும், அப்போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தாகவும், கும்பலாக ஓடியதை பார்த்ததாகவும், அதனை பார்த்து நான் பயந்துகொண்டு பின்புறம் ஓடிவிட்டதாகவும் சொல்லியுள்ள சங்கதிகளை தவிர இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எந்த சங்கதிகளும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரிகள் கையில் ஆயுதங்களுடன் ஓடியதை நான் பார்த்தேன்.

இறந்துபோன நபர்களும், எதிரிகளும் எனது உறவினர்கள் என்ற சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். எங்கள் ஊரில் சுமார் 500, 600 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் கிழக்குவீதி, தெற்குவீதி, வடக்குவீதி, மேலவீதி, மேட்டுதெரு, காலணி தெரு என்று 6 வீதிகள் இருக்கிறது என்றால் சரிதான். காலை 9.00 மணிக்கு இவ்வழக்கு சம்பவம் நடந்துமுடிந்துவிட்டது என்றால் சரியல்ல. காலை 10.00 மணி ஆகும். காலை 10.00 மணிக்கு சம்பவம் நடந்து முடிந்துவிட்டது என்றால் சரிதான்.

எதிரி சிலம்பரசன் சம்பவத்தினத்தன்று சென்னையில் வேலை செய்துவந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலிசார் சம்பவ இடத்திற்கு பிற்பகல் 12.00 மணிக்கு வந்தார்கள். அன்றைய தினம் எதிரிகளில் யார்யாரை போலிசார்

காவல்நிலையத்திற்கு பிடித்து சென்றார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அரசு தரப்பு குறுக்குவிசாரணையில் நான் சாட்சியம் அளித்துள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வழக்கு சம்பவம் எதனையும் பார்க்கவில்லை என்றாலும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், நான் ஊர்காரன் என்பதால் என்னை ஒரு சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல.

**8 மற்றும் 13 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.